பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

When only The best is Good Enough



Buy Solide Pumps

# உதயன்

விலை ரூபா 3-50

தர மானதே சிறந்தது என்றுமே



சொலிட்
பம்பையே வாங்குங்கள்

சுடர் 5: பிரமோதூத ஆடி 07 திங்கட்கிழமை ஹிஜ்ரி 1410 துல்ஹஜ் பிறை 29 (23-07-1990)

UTHAYAN - A LIVELY NATIONAL TAM'L DAILY கதிர் 151

# வடக்கில் பெரும் தாக்குதலுக்கு
# அரசாங்க படைகள் முஸ்தீபு?

## 10 நாட்களில் முக்கிய நடவடிக்கை
## தளபதி கொப்பேகடுவ கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜூலை 23

வடக்கில் பெரும் தாக்குதலுக்கு அரசாங்கப் படைகள் முஸ்தீபு செய்து வருவதாக ஆதார பூர்வ செய்திகள் தெரிவிப்பதாக இந்திய வானொலி நேற்று அறிவித்தது.

இதேவேளை புலிகள் - அரசு யுத்தத்தில் அடுத்துவரும் பத்து நாட்களும் மிக முக்கியமான நாட்களாக இருக்கும் என்று வடபகுதிக்குப் பொறுப்பான இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ வவுனியாவில் வைத்துத் தெரிவித்திருக்கிறார்.

இராணுவத்தின் வவுனியா பிராந்தியத் தலைமையகத்தில் வைத்து கொழும்பு செய்தி நிறுவனம் ஒன்றுக்கு நேற்று முன்தினம் அளித்த பேட்டி ஒன்றிலேயே ஜெனரல் கொப்பேகடுவ இப்படிச் சொன்னார்.

"இராணுவ ரகசியங்களை -நடவடிக்கைகளை- வெளியிட முடியாது. ஆகவே, பத்து நாட்கள் பொறுத்திருங்கள் என்று மட்டுமே என்னால் சொல்ல முடியும். இந்தப் பத்துத் தினங்களும் இந்த யுத்தத்தின் தீர்க்கமான முடிவுகளைத் தரும் நாட்களாக அமையப்போகின்றன" - என்று அவர் மேலும் சொன்னார்.

இதேசமயம்-

இரவு நேரக் குண்டு வீச்சு பெரும் தாக்குதல் நடவடிக்கையின் முதற்கட்டமோ என்றும் அச்சம் தெரிவிக்கப்பட்டது. [உ-எ]

## இருள் படர்ந்த வேளை நகரில் குண்டுவீச்சு!

யாழ்ப்பாணம், ஜூலை 23

யாழ்ப்பாண நகரத்தில், இருள் கவ்விய பின்னர், இரவு நேரக் குண்டு வீச்சும் ஆரம்பிக்கப்பட்டு விட்டது.

நேற்றிரவு 7 30 மணிக்குப் பின்னர் வந்த இரண்டுக்கும் அதிகமான விமானங்கள் பேரிரைச்சலுடன் நகரில் நாலா பக்கங்களிலும் பறந்து கோட்டையைச் சூழவுள்ள பகுதிகளில் குண்டுகளை வீசியது.

காரிருள் படர்ந்த நேரமாதலால் ஒவ்வொரு குண்டும் பெரும் வெளிச்சத்தைப் பரப்பி வெடித்துச் சிதறியதைப் பார்த்து மக்கள் பெரும் பதற்றத்துக்கு ஆளாகினர்.

இருட்டு வேளையாதலால் இலக்குத் தவறிக் குண்டுகள் எங்கே விழப்போகின்றனவோ என்று ஒவ்வொரு தெருவில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழ நிலைவரம் குறித்து கருணாநிதியுடன் பேச்சு

சென்னை, ஜூலை 23

முதலமைச்சர் கருணாநிதியை முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலாளர் கே. பி. எஸ். மேனனும் இலங்கையில் பணிபுரிந்த முன்னாள் இந்தியத் தூதர் திக்ஷித்தும் ஆகியோர் நேற்று சந்தித்துப் பேச்சுகள் நடத்தினர்.

இலங்கை நிலைவரம் பற்றி இருவரும் முதலமைச்சருடன் கலந்துரையாடியதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

★ ஈழத் தமிழர் விவகாரம் குறித்து

## இந்திய மத்திய அமைச்சர் தமிழகத்தில் பேச்சு!

சென்னை, ஜூலை 23

இந்திய உள்துறை அமைச்சர் முப்தி செய்யத் முகமது இன்று சென்னைக்கு விஜயம் செய்கிறார்.

இலங்கை நிலைவரம் குறித்து தமிழக அரசியல் கட்சிகளின் தலைவர்கள், தமிழக முதலமைச்சர், உயர் அதிகாரிகள் ஆகியோருடன் உள்துறை அமைச்சர் கலந்துரையாட இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ-எ]

## கிளிநொச்சியிலும் நேற்று விமானக் குண்டு வீச்சு!

நேற்று மாலை 6 மணிமுதல் சுமார் ஒருமணி நேரம் கிளிநொச்சி இராணுவ முகாமை சூழவுள்ள பகுதிகளை நோக்கி பொம்மர்களும், ஹெலிக்கொப்டர்களும் பெரும் தாக்குதலை நடத்தின. [உ-9]

## தள்ளாடி தாக்குதலில் எட்டுப் படையினர் மரணம்

தள்ளாடிப் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 8 இராணுவத்தினர் பலியானதாகவும், 20 பேர் காயமடைந்ததாகவும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

படையினர் முருங்கன் பகுதியில் 4 வீடுகளை எரித்துள்ளதாகவும் —

தற்பொழுது முருங்கனில் இருந்து 2 மைல் தொலைவில் தரித்து நிற்கும் படையினர் மீது விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (உ-9)

## ஈரோஸ் எம். பிக்கள், பிரமுகர்கள் கொழும்பில் பணயக் கைதிகளா?

### யாழ்ப்பாணம் வர முயன்றும் அனுமதி இல்லை

யாழ்ப்பாணம், ஜூலை 23

தற்போது கொழும்பில் தங்கிநிற்கும் ஈரோஸ் எம். பிக்கள் மற்றும் பிரமுகர்கள் சுமார் நூறுபேர் இலங்கை அரசாங்கத்தினால் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருக்கின்றார்களா?

—இப்படி ஒருகேள்வி தற்போது எழுப்பப்பட்டிருக்கிறது.

கடந்த ஜூன் 11ஆம் திகதி விடுதலைப் புலிகள் - அரச படைகள் மோதல் ஆரம்பமான நாள்முதல், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வருவதற்கு இவர்கள் முயன்றுவருவதாகவும் —

ஆனால் அரசாங்கம் ஏதோ ஒருவகையில் அதைத் தடைசெய்துவருவதாகவும் ஈரோஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

விமானமூலம் பலாலிக்குச் செல்ல ஏற்பாடு செய்யும்படி ஈரோஸ் எம். பிக்கள் கேட்டதாகவும் அதற்குப்பாதுகாப்பு அமைச்சு மறுப்புத் தெரிவித்ததாகவும் கூறப்பட்டது.

கொழும்பில் சிக்கி நின்ற யாழ்ப்பாணத்து மக்கள் அங்கிருந்து லொறிகளில் ஒன்று சேர்ந்து அணியாகவர முற்பட்டபோது அந்த அணியில் ஈரோஸ் பிரமுகர்களும் சேருவதற்குத் தங்கள் பெயரைக்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் 6 படையினர் பலி

கொழும்பு, ஜூலை 23

மன்னார், இராட்சதக்குளம் அருகில் விடுதலைப் புலிகளுடன் நடந்த மோதல் ஒன்றில் ஆயுதப்படையினர் ஆறுபேர் உயிரிழந்தனர் என்றும்—

ஒன்பது படையினர் காயமடைந்தனர் என்றும் அரசு அறிக்கை ஒன்று தெரிவித்தது. (ஓ-எ)

## போராளி வீர மரணம்

நேற்று வயாவிளான் பகுதியில் சென்றியில் இருந்தோர் மீது பலாலி இராணுவத்தினர் சினைப்பர் தாக்குதல் மேற்கொண்டதில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி ஒருவர் வீரமரணமடைந்தார்.

மரணமானவர் இரண்டாவது லெப்டினன்ட் தேவன் [சின்னத்தம்பி ஈசன் ஒதியமலை] எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-9)

## பரந்தன் வரை படை முன்னேற்றம்! கிளிநொச்சி நோக்கி செல்ல முயற்சி!!

### வழிமறித்து புலிகள் கடும் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூலை 23

ஆனையிறவு முகாம் பகுதியில் ஹெலிக்கொப்டர்கள் மூலம் குவிக்கப்பட்ட துருப்புகள் லக்ஸபான வீதியால் சென்று பரந்தன் - முல்லைத்தீவு வரை முன்னேறியதாகவும்-

அவர்களை முன்னேற விடாது விடுதலைப் புலிகள் தொடர்ந்து தாக்கி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இராணுவத்தினர் மூன்றாம் வாய்க்கால் பகுதி ஊடாக முற்றுகையிடப்பட்டிருக்கும் கிளிநொச்சி இராணுவ முகாமிற்குச் செல்ல முயற்சிப்பதாகவும்-

இந்த முயற்சியை முறியடிக்க கடும் தாக்குதலை விடுதலைப் புலிகள் தொடுத்திருப்பதாகவும்-

விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதலில் இராணுவத் தரப்பில் பெரும் சேதம் ஏற்பட்டிருப்பதாகவும் சொல்லப்பட்டது. (உ-9)

## இருவர் மரணம்

மட்டக்களப்பு தெக்கிளாச் சோலையில் நேற்று நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்ற ஹெலிக்கொப்டர் தாக்குதலில் இரண்டு பொதுமக்கள் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது, [உ-9]

## ஒற்றை ஆட்சி முறையின் கீழ் தீர்வு காணும் வாய்ப்பு இல்லை!

### ஈரோஸ் எம். பிக்கள் ராஜினாமா குறித்து அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 23

தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு ஒற்றையாட்சி முறையின் கீழ் தீர்வுகாணும் வாய்ப்பு கைநழுவிப் போய்விட்டது.

ஈரோஸின் வெகுஜன அணியான ஈழவர் ஜனநாயக முன்னணி இவ்வாறு அறிவித்திருக்கிறது.

ஈரோஸ் எம். பிக்கள் தமது பதவிகளை இன்று இராஜினாமாச் செய்கிறார்கள். அதனை ஒட்டி ஈழவர் ஜனநாயக முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. வேலுப்பிள்ளை பாலகுமாரன் விடுத்த அறிக்கையிலேயே மேற்படி விபரம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வெலிக்கடைச் சிறைச்சாலையில் இடம்பெற்ற படுகொலையின் ஏழாவது வருட நினைவை நெருங்கும் இவ்வேளையில் நாம் சிறிலங்கா நாடாளுமன்றத்திலிருந்து முற்றாக விலகத் தீர்மானித்திருப்பது காலப் பொருத்தமானதே.

ஏழாண்டுகளுக்கு முன்பு எவ்வாறு இனவாதம் தலைவிரித்தாடி நாடு முழுவதும் தமிழ் பேசும் மக்களின் இருப்பும் - வாழ்வும் கேள்விக்குஉள்ளாக்கப்பட்டிருந்தனவோ, அதே போன்றதான ஒரு நிலைமையே இன்று நிலவுகின்றது.

சிங்கள பௌத்த இனவாதத்தின் குறியீடாகவே அரசும், அதன் கருவிகளும் செயற்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவை வாகனம் மீது வல்லைவெளியில் ஹெலி சூடு!

யாழ்ப்பாணம், ஜூலை 23

வடமராட்சியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த யாழ். செஞ்சிலுவைச்சங்க வாகனம் மீது ஹெலியில் இருந்து வேட்டுகள் தீர்க்கப்பட்டன.

நேற்றுப் பகல் 12 மணியளவில் வல்லை வெளியில் இச் சம்பவம் நடைபெற்றது.

வாகனத்தில் வந்தவர்கள் வாகனத்தை நிறுத்தி மரங்கள், மதகுகளில் ஒளிந்ததால் உயிர் தப்பியதாகத் தெரிவித்தனர்.

சைக்கிள்களில் வந்தவர்கள் மீதும் நேற்று ஹெலி வேட்டுக்களைத் தீர்த்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-3-10)

## முச்சந்தி முரளி



மின்சாரம் மட்டுந்தான் அங்கிருந்து வந்தது. அதையும் சாட்டோடு சாட்டாக நிற்பாட்டி விடுவம் எண்டு நினைச்சிட்டினமோ...!

## அத்தியாவசிய பொருள்களுடன் வடக்கு நோக்கி கப்பல் புறப்பாடு

யாழ்ப்பாணம் ஜூலை 23

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிக்கொண்டு கொழும்பில் இருந்து சிகிரியா என்ற கப்பல் யாழ்ப்பாணம் நோக்கி நேற்றுக் காலை புறப்பட்டது.

அத்தியாவசிய உணவுப் பொருள்களைக் கொழும்புத் துறைமுகத்தில் எலிசபெத் இறங்குதுறையில் ஏற்றிக்கொண்டு புறப்பட்ட இந்தக்கப்பல், திருகோணமலைக்குச் சென்று பிரிமா ஆலையில் மா ஏற்றிக்கொண்டு முதலில் முல்லைத்தீவுக்குச் செல்லும்.

அங்கு 250 தொன் உணவுப் பொருளை இறக்கிவிட்டு மீதி 500 தொன் உணவுப் பொருள்களை இங்கு கொண்டுவரும்.

நாளை மறுதினம் பருத்தித்துறை வந்து சேரும் இக் கப்பலில் இருந்து அன்றே பொருள்களை இறக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

வள்ளங்கள் மூலம் பொருள்கள் கரைக்கு கொண்டுவரப்

[3ஆம் பக்கம் பார்க்க]

## வடபகுதிக்கு மின் வழங்க கொழும்பு அசமந்தம்?

யாழ்ப்பாணம், ஜூலை 23

கிளிநொச்சியில் விமானக் குண்டு வீச்சினால் சேதமுற்ற 132 கே.வி மின் கம்பிகளைத் திருத்தம் செய்யும்விடயத்தில் இலங்கை மின்சார சபை அசமந்தப் போக்கைப் பின்பற்றுவதாகக் கூறப்படுகிறது.

இந்த மின்கம்பி விமானக் குண்டு வீச்சினால் சேதமடைந்தது குறித்து இலங்கை மின்சார சபையின் யாழ். பிராந்திய அலுவலகம் கொழும்பில் உள்ள தலைமையலுவலகத்துக்கு உடனடியாக அறிவித்ததாகவும்-

ஆனால்சேதத்தை திருத்த தலைமையலுவலகம் முன்முயற்சி எதனையும் எடுக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

சேதமடைந்த கேபிளைத் திருத்துவதற்கு பணிபுரியச்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## சுபநேரம்

23- 7- 90

திங்கட்கிழமை ஆடி 07

சுபநேரம்: 12-02— 01-32

இராகுகாலம் 07-32—09-02

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கண்ணாடிஅலுமாரி, மேசை, கதிரை, குளிர்சாதனப் பெட்டி, புதிய அஸ்பெஸ்ரஸ் சீற், பனைமரம், தீராந்தி, புதிய நிலைகள், கதவுகள், ஓடுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- 195, சிவன் பண்ணை வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். (13781)

### விற்பனைக்கு

கோவில்களுக்குத் தேவையான பூலசமணி, அசையாமணி, திருவாசி குத்துவிளக்கு, ஸ்தூபி, வேல், சூலம், கும்பச் செம்பு, அடுக்குத்தீபம், பஞ்சாலாத்தி, பட்டுக்குடை அனைத்துப் பொருள்களும், எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். ஸிம்ஸ் 297. K.K.S வீதி. தற்போது 76/2 நாவலர் வீதி, சோனகதெரு. யாழ்ப்பாணம். (13789)


# வாகன அணியில் சென்றோருக்கு நடு வழியில் ஏற்பட்ட அனுபவம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

''உயிரைப் பணயம் வைத்தே வாகன அணியில் சென்று வந்தேன். எம்மை பணயம் வைத்து இராணுவம் தமது காரியத்தை நிறைவேற்ற முனைந்தது''

– மதவாச்சிக்கு உணவுப் பொருளை ஏற்றிவர வாகன அணியில் சென்று வந்த லொறிச் சாரதி ஒருவர் இத் தகவலைக் கூறினார்.

தமது அனுபவம் பற்றி அவர் தெரிவித்ததாவது:-

செவ்வாய்க்கிழமை காலை யாழ்ப்பாணத்தில் இருந்துபுறப்பட்டு, ஆனையிறவுமுகாமை காலை 8.30 மணியளவில் சென்றடைந்தோம்,

எமது வாகன அணி முகாமுக்கு முன்னால் சென்றதும். இராணுவத்தினர் தமது பீரங்கி வாகனங்களைக் கொண்டு வந்து எமது வாகனங்களுக்கு நடுவே நிறுத்தினர். பின்னர் வாகன அணிகளைச் சூழவுள்ள பகுதிகளை நோக்கி சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்தனர்.

இதனால் அப்பகுதியில் பெரும் மோதல் வெடித்தது. மோதலில் சிக்கி யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்க லொறிச்சாரதி காயமுற்றார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் எமது வாகன அணிக்கு அருகில் ஷெல் ஒன்று வந்து விழுந்தது. ஆனால் அது மணலினுள் விழுந்து புதைந்ததால் வெடிக்காமற்போனது அதனால் நாம் உயிர்தப்பினோம்.

இதேவேளை, நாம் அங்கு வரமுன்னர் அப்பகுதியில் ஹெலிகளிலிருந்து உணவுப் பார்சல்கள் போடப்பட்டிருந்தன. அவை முகாமுக்கு வெளியே விழுந்து கிடந்தன.

எமது வாகன அணியுடன் சேர்ந்து முன்னேறி அந்தப் பொதிகளை எடுக்க படையினர் முயன்றனர். அதனால் சண்டை மேலும் கடுமையானது. இதனையடுத்து இராணுவம் முகாமுக்கு பின் வாங்கிச் சென்றது.

பின் ஒருவாறு மடுவுக்கு போய்ச் சேர்ந்தோம். அங்கிருந்து புதன்கிழமை மதவாச்சிக்குப் போய் பொருள்களை ஏற்றிக் கொண்டு மடுவுக்குத் திரும்பினோம்.

வியாழக்கிழமை மடுவில் இருந்து புறப்பட்டு, பூநகரிக்கு வந்தோம். பரந்தனில் சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்ததால் முன்னேற முடியாமல் மீண்டும் திரும்பி குஞ்சுப் பரந்தனுக்குச் சென்று, அங்கு தங்கினோம்.

வெள்ளிக்கிழமையும் அங்கு தங்கி சனியன்று காலை புறப்பட்டு வந்து சேர்ந்தோம்.

மூன்று மூன்று லொறியாகச் சேர்ந்தே ஆனையிறவைத் தாண்டி வரமுடிந்தது. சனியன்று அப்பகுதியில்ஹெலி வேட்டுக்களைத் தீர்த்துக் கொண்டிருந்தது. என்றார். (உ-3)

## 6 ஆவது கஜபாகு படையே தரையிறக்கம்

கொழும்பு, ஜூலை 23

பரந்தனில் ஹெலிக்கொப்டர்கள் மூலம் இறக்கப்பட்ட துருப்புகள் ஆறாவது கஜபாகு படையை சேர்ந்த ஒரு பிரிவு எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## பதுங்கு குழியாக மதகுகள்

கொழும்புத்துறை, ஜூலை22

மதகுகளுக்கு அருகில் வசிப்பவர்கள் மதகுகளுடன் மண் மூடைகளை அடுக்கிஅவற்றை பதுங்கு குழிகளாக மாற்றிருகிறார்கள யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் இதனைக் காணக் கூடியதாக இருக்கிறது. (இ-30)

## ரூ. 1000 முற்பணம்

கொழும்புத்துறை, ஜூலை23

வவுனியா, யாழ் மாவட்ட மதுவரித்திணைக்கள உதவி ஆணையாளர் அலுவலகங்ளைச் சேர்ந்த சகல ஊழியர்களுக்கும் சம்பள முற்பணமாக ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. (இ-30)

## நெடுந்தீவில் மருந்து தட்டுப்பாடு

நெடுந்தீவு, ஜூலை 23

நெடுந்தீவு அரசினர் ஆஸ்பத்திரியில் முக்கிய மருந்து வகைகள் உட்பட பலதரப்பட்ட மருந்து வகைகளுக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது.

கடற்படையினரின் அச்சுறுத்தல்கள், பீரங்கித் தாக்குதல்கள் காரணமாக அவசர நோயாளிகளை யாழ்.நகருக்கு எடுத்துச் செல்ல முடியாத நிலையும் இருந்து வருகிறது. (இ-111)

## முகாம் சிறார்களுக்கு பசுப்பால்

யாழ்ப்பாணம், ஜூலை 23

முத்துத்தம்பி வித்தியாசாலை, சென். சார்ல்ஸ் மகாவித்தியாலயம் அகதி முகாம்களில் உள்ள ஆறு வயதுக்குஉட்பட்ட பிள்ளைகளுக்கு 'அகதிகள்புனர்வாழ்வுநிதியம்-1983' பசுப் பால் வழங்கி வருகிறது.

தற்போது நிலவும் பால் மா தட்டுப்பாட்டை அடுத்தே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-10)

## அகதி முகாமுக்கு விஜயம்

பச்சிலைப்பள்ளி, ஜூலை 23

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. சுந்தரம்பிள்ளை தலைமையிலான தென்மராட்சிப் பகுதிகுழு அகதிகள் முகாம்களுக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டது.

இக்குழுவில் சாவகச்சேரி மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் தா. சிவபாதம், டாக்டர் எஸ். எஸ். அருளானந்தம், நகரசபை செயலாளர் த. நவரத்தினராசா சாவகச்சேரி லயன்ஸ் கழக அங்கத்தவர்கள், அறவழி போராட்டக்குழு அங்கத்தவர்கள், தென்மராட்சி அகதிகள் நிவாரணக்குழு பிரதிநிதிகள் இடம்பெற்றிருந்தனர். (இ-1?)


## அறிவித்தல்

29 - 06 - 1990 கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் லொறியில் வரும் பொழுது நீல நிற File உடன் எனது சான்றிதழ்கள் (Certificates) கைதவறிவிட்டது.

இதைக் கண்டு எடுத்தோர்

உதயன் காரியாலயத்தில் அல்லது
S. மணிமாறன், C/o K. செல்வரத்தினம்,
பிள்ளையார் வீதி, ஆனைக்கோட்டை.

என்னும் எனது விலாசத்துக்கு சான்றிதழ்களை அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறேன் File முக்கியம் இல்லை. தகுந்த சன்மானம் வழங்கப்படும். (13689)

## இடமாற்றம்

யாழ்/ ராணி சினிமாவிற்கு அருகில் இல: 06, ஜுபிலி பசாரில் இயங்கிவந்த **டயா வோச் வேக்ஸ்** என்னும் ஸ்தாபனம் பாதுகாப்பு காரணமாக **இல. 6, பலாலி வீதி, திருநெல்வேலி சந்திக்கு** மாற்றப் பட்டுள்ளதென்பதை வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றோம்.

(13679)

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி லூட்ஸ் மாகிறெட் (சறோ) தேவதாஸ்

மண்ணிற்கு: 07 - 06 - 1940 விண்ணிற்கு: 23 - 07 - 1985

**எமக்காய் வேண்டு!**

அன்புநிறை லூட்ஸ் சம்மா மாகிறெட் 'டே'
ஆண்டைந்து கடந்தாலும் நீயோ எம்மை
உன்னன்புச் சிறகாலே அணைத்தெடுத்து
ஊட்டினாய் யமுதுடனே யின்பப் பாலால்
கன்னல்மொழி சிந்துகின்ற மழலை தந்தாய்!
காட்டியவர் வளர்க்கின்ற முறைமை சொன்னாய்!
இன்பமுட னிருக்கின்ற வேளை தன்னில்
இறைவனவன் அழைக்கின்றார்; என்று சொன்றாய்!
அங்கிருந்து எங்களுக்காய் வேண்டு! நாமும்
அங்குவந்து சேருதற்குப் பாதை காட்டு
இங்கிருக்கும் வேளையதில் இயேசு சொன்ன
இறைவழியைப் பின்பற்றும் வாய்ப்பை யூட்டு
பொங்குமனப் பிரமைதனை ஓட்டு! ஓட்டு
பொல்லாங்கு தவிர்க்க நலவறனே காட்டு!
மங்கலமா மாட்சியுடன் சென்ற லூட்ஸ்
மணாளனுடன் குழந்தைகளை மறந்திடாதே!

கணவன், பிள்ளைகள்,
பெற்றோர், சகோதரர், உறவினர்கள்.

466/2B. அர்ச் யுவானியார்-
கோயில் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். [13786]

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்வன் மகாலிங்கம் மகேஸ்வரன்

(யாழ். மத்திய கல்லூரி வர்த்தக மாணவன்)

அன்னை மடியில் 20 - 06 - 1969 அரக்கர் கையில் 23 - 07 - 1989

யார் யாரோ வந்ததுவும் அழுதவொலி கேட்டதுவும்
மார் மீது புரண்டு மலர் மாலை அணிவித்ததுவும்
ஓர் ஆண்டில் ஓடி ஒளித்து விட்டதெங்கள்
பேர் விளங்க வந்த பெருநிலவு மறைந்துயிங்கே!
நீதியெது நேர்மையெது ஏதறியாப் பாவியர்கள்
பாதியிலே பறித்து விட்ட புதுமலரே மகேஸ்வரனே!
மேதினியில் உன் குருதி விடிகாலை சிவப்பாக்கிச்
சேதியது சொல்லும் சேர்க்கின்றோம் எம் அஞ்சலிகள்
நின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:-

அப்பா, அம்மா, தங்கை,
தம்பி, உறவினர்கள், நண்பர்கள்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. (13783)

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மாலா!

மங்காத ஒளிவிளக்கே! எம்மை விட்டுப் பிரிந்து இன்று பத்து ஆண்டுகள் ஆகின்றன. பூப்பெய்தி புனித நீராட்டிப் பார்த்து மகிழ்ந்திடும் வேளையில் பார்த்தனன் அந்தப் பாவி யமனும் உன்னை! பாரினில் இருந்து பறித்துப் பரலோகம் அழைத்திட்டானே!

உன் பிரிவால் துயருறும்

தந்தை, தாய், சகோதரிமார், சகோதரன்,
அத்தான் குடும்பத்தினர், சித்தப்பா குடும்பத்தினர்,
உடுப்பிட்டி அம்மம்மா, அத்தான் குடும்பத்தினர்,
சித்தப்பாமார் குடும்பத்தினர், மாமாமார்குடும்பத்தினர்.

தாவடி,
1990 - 07 - 23

இ. நல்லையா (13685)

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



### திருமதி அன்னபூரணம் சிவகுரு

தோற்றம்: 10 - 08 - 1913 மறைவு: 23 - 06 - 1990

23 - 06 - 1990 இல் சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவியின் மரணச் சடங்கில் நேரில் கலந்து கொண்டவர்களுக்கும் எமக்கு உதவிகள் பல புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றியைத் தெரிவிப்பதோடு இன்று [திங்கள் 23 - 07 - 90] இல் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சிவகுரு குடும்பத்தினர்.

ஆடியபாத வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். [13782]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### திருமதி பார்வதி

அன்னை மடியில்: 17 - 04 - 1924 ஆண்டவன் அடியில்: 23 - 06 - 1990

அன்புக்கொரு தெய்வம் எங்கள் அம்மா பார்வதி
பண்புக்கொரு உதாரணம் பார்வதியம்மா
எங்களை பரதவிக்க விட்டு
பராசக்தியிடம் போனீர்களா?
அடக்கமே உருவெடுத்தால் போல் இருந்து
எங்களை யெல்லாம் வழிநடத்திவிட்டு
திடீரென பிரிந்த எங்கள் அன்புத் தெய்வத்திற்கு
எந்நாளும் எங்கள் கண்ணீர்காணிக்கை.

உங்கள் பிரிவால் துயருறும்:

அன்புத் தாய், மகள், சகோதரர், மருமக்கள்,
மைத்துனிமார், பேரப்பிள்ளைகள்.

''குமரவேல்''
[illegible]
வட்டுக்கோட்டை. [13785

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

### சின்னத்தம்பி அன்னம்மா

கிளிநொச்சியில் 07-06-90ஆம் திகதி வியாழக்கிழமை தனது இல்லத்தில் காலமான எமது அருமைத் தாயான சின்னத்தம்பி அன்னம்மாவின் ஞாபகார்த்தமாக புலோலி தெற்கு. முதலிவம்பாள் ஆலயத்தில் அன்னாரின் ஆத்மா சாந்திக்காக தெய்வ ஆசி வேண்டி பூசையும், அன்னதானமும் 23-07-90ஆம் திகதி திங்கட்கிழமை பகல் நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்று சமுகமளித்து மேற்படி பூசையிலும், மதியபோசனத்திலும் கலந்து ஏதுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**அம்மா தாயே!**

எம்மை எக்குறையும் இன்றி சீராட்டி பராட்டி சமூகத்தில் தலை நிமிர்ந்து வாழ வைத்த எம் தெய்வமே! உன் நினைவால் நாம் ஏங்கித் தவித்தாலும். உன் ஆத்ம சாந்தியடைய நெஞ்சாற இரு கரம் கூப்பி எல்லாம் வல்ல இறைவனை வணங்கிப் பிரார்த்திக்கிறோம்.

இங்ஙனம்
உங்கள் பிரிவால் வாடும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளை, பூட்டப்பிள்ளைகள்.

சந்தா தோட்டம்,
புலோலி கிழக்கு,
புலோலி. [13780]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உதயன்

## அசமந்தம் ஏன்?

வடக்கு - கிழக்கில் நடக்கும் யுத்தத்தில், அரசாங்கப் படைகள் ஆகப் பிந்திப் பாவித்திருக்கும் ஆயுதம் புதுவிதமான, துர்நாற்றம் வீசும் திரவக் குண்டு. பதினைந்துக்கும் அதிகமான இந்தப் புதிய குண்டுகள், முதன் முதலில் கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாண நகரத்தில், மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் போர் விமானங்களால் போடப்பட்டன.

உலகின் வேறெந்தப் பகுதியிலும் இப்படி ஒரு குண்டு வீசப்பட்டதாக எவ்வித முன்னுதாரணமும் இல்லை.

பிரஸ்தாப குண்டு வெடித்துச் சிதறி உண்டாக்கிய துர்நாற்றமும், அதன் உள்ளிருந்த பதார்த்தங்களும் அது தொற்று நோய் பரப்பும் ஒருவகை இரசாயனக் குண்டாக இருக்க வேண்டும் என்ற பொதுவான சந்தேகத்தை உண்டாக்குகின்றன

இரண்டு நாடுகளுக்கிடையே நடக்கும் யுத்தங்களில் கூட, இரு பக்கங்களிலும் பல நாடுகள் சேர்ந்து நடத்தும் பெரும் போர்களில் கூட, இரசாயன ஆயுதங்கள் பாவிப்பதை சர்வதேச யுத்த விதிகள் தடை செய்கின்றன. ஈராக் - ஈரான் யுத்தத்தில் இரசாயன ஆயுதங்கள் பாவிக்கப்பட்டதாகக் கூறப்பட்டபோது சர்வதேச மட்டத்தில் பெரும் எதிர்ப்புக் கிளம்பியது.

எனவே, யாழ். நகரில் வீசப்பட்ட புதிய குண்டுகள் இரசாயனக் குண்டுகள் தான் என்று ஆய்வுரீதியாக, நிபுணத்துவ ரீதியாக, உத்தியோகபூர்வமாக நிலை நாட்டப்பட்டால், அரசாங்கத்தின் இன ஒழிப்பு நடவடிக்கையைச் சர்வதேச சமூகத்துக்கு இலகுவாக நிரூபிக்க வாய்ப்பாக இருக்கும்.

அந்தக் குண்டுகள் வீசப்பட்டு நான்கு நாட்கள் கழிந்து விட்ட பின்னரும் அவை என்ன வகையைச் சேர்ந்தவை; அவை ஏற்படுத்தக் கூடிய பயங்கரமான உடன் விளைவுகள், பின் விளைவுகள் எவை; அவற்றின் பாதிப்பிலிருந்து தப்புவதற்கு, பாதுகாத்துக் கொள்வதற்கு, மக்கள் என்ன தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்; என்பன போன்ற விவரங்கள் உத்தியோகபூர்வமாக இன்னும் வெளியிடப் படவிலலை.

புதிய குண்டு எத்தன்மையது என்பது குறித்தும் பூரணமான பரிசோதனை- ஆய்வு நேற்றுவரை மேற்கொள்ளப்படவில்லை. யாழ். போதனா வைத்திய சாலை, யாழ் மருத்துவபீட ஆய்வுகூடம், சுகாதாரத் திணைக்களம் ஆகியனவற்றில் ஒன்றிலாவது குண்டைப்பற்றிய பூரணமான, உத்தியோகபூர்வமான முடிவைப் பெறமுடியவிலலை சுகாதார சேவையுடன் சம்பந்தப்பட்டவேறு நிறுவனங்களும், அமைப்புகளும் கூட இவ் விடயத்தில் அக்கறை காட்டியதாகத் தெரியவில்லை.

புதிய குண்டு ஆபத்தானது என்று எழுந்தமானமாகச் சொல்லப்படுகிறது. ஆனால் நிபுணத்துவ ரீதியாக, உத்தியோக ரீதியாக மக்களுக்கு எதுவும் அறிவிக்கப் படவில்லை மக்களின் குழப்பத்தையும், அச்சத்தையும் போக்கவோ, அவர்களுக்கு அறிவுறுத்தவோ பகிரங்கமான அறிக்கை எதுவும் வெளியிடப்படவில்லை.

சம்பந்தப்பட்ட எல்லோரும் மக்கள் பாதிக்கப்பட்ட பின்னரா கட்டி அழப்போகிறார்கள்? அல்லது அது வெறும் கழிவு நீர் என்று சொல்லி அசமந்தமாக இருந்து மக்களை அழியவிட நினைக்கிறார்களா? பொறுப்பு அறிந்து உரிய நேரத்தில் பணிபுரிய முடியாதவர்கள் மக்கள் சேவைக்கு உதவமாட்டார்கள்.

# வெளிநாட்டு பாஸ்போர்ட்காரர் கப்பல் மூலம் கொழும்புக்கு

## செஞ்சிலுவைச் சங்கம் ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 23

யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள வெளிநாட்டுப் பாஸ்போர்ட்காரர் எதிர்வரும் வெள்ளிக்கிழமை கப்பல்மூலம் கொழும்புக்கு அனுப்பப்பட உள்ளனர்.

வெளிநாட்டில் இருந்து யாழ்ப்பாணம் வந்து கொழும்புக்கு செல்லமுடியாதுள்ள வெளிநாட்டவர்களையும், வெளிநாட்டுப் பாஸ்போர்ட் வைத்திருக்கும் இலங்கையரையும் இந்தக் கப்பல் மூலம் அனுப்ப செஞ்சிலுவைச் சங்க சர்வதேச குழுவினர் ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

திருகோணமலைக்கு இங்கிருந்து இவர்கள் அழைத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து வாகன அணியில் கொழும்புக்கு அழைத்துச் செல்லப் படவுள்ளனர்.

இப்படிச் செல்ல விரும்பும் வெளிநாட்டுப் பாஸ்போர்ட் வைத்திருப்பவர்களை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவுடன் தொடர்புகொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (இ-3)

# தமிழ்மக்களின் உயிர்-உடைமைகள் பெருமளவு சேதம்

## யுத்தம் நிறுத்தப்பட வேண்டும்
## சபையில் வன்னி மாவட்ட எம். பி

கொழும்பு, ஜூலை 23

தற்போதைய யுத்தத்தில் தமிழ் மக்களின் உயிர், உடைமைகள் பெரும் அளவு அழிக்கப்பட்டுள்ளன இந்த யுத்தத்தை அரசாங்கம் நிறுத்த வேண்டும்.

வன்னிமாவட்ட எம். பி. கே. ஆர். குகனேஸ்வரன் (ஈ. பி ஆர். எல். எப்) அவசரகாலச்சட்ட நீடிப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசியதாவது:-

வடக்கு -கிழக்கு மாகாணத்தில் இதுவரை 2,500க்கு மேற்பட்ட அப்பாவி மக்கள் ஆயுதப்படைகளால் கொலை செய்யப்பட்டுள்ளனர். ஆறு இலட்சத்துக்குக் கூடுதலான மக்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளனர். நூற்றுக்கணக்கான கடைகள், வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. இவற்றையெல்லாம் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்த பின்னரும் கூட கொலைகள் குறையவில்லை.

இன்று நடைபெறும் யுத்தம் தமிழ் மக்களுக்கு எதிரானதல்ல, புலிகளுக்கு எதிரானதே என்று ஜனாதிபதியும், அமைச்சர்களும், ஆளுங் கட்சி உறுப்பினர்களும் கூறி வந்தாலும் இன்று வடக்கு - கிழக்கில் என்ன நடைபெறுகிறது என்பதை கூறவேண்டியது எனது கடமை

### தமிழர் படுகொலை

ஆயுதப் படைகள் எவ்வாறு செயற்படுகின்றன என்பதைக் காட்டுவதற்கு ஒரு சில உதாரணங்களை மட்டும் இங்கு குறிப்பிடுகிறேன்.

17. 7. 90 அன்று இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய மட்டக்களப்பு லேக் வீதியில் 27 இளைஞர்கள் ரயர் போட்டு எரிக்கப் பட்டுள்ளனர்.

கோட்டைக் கல்லாறு சுற்றிவளைப்பின் போது ஏராளமானவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

21- 06- 90 இல் காரைதீவில் குடும்பஸ்தர்களான 14 பேர் ஒரே வீட்டில் போட்டு எரிக்கப்பட்டுள்ளனர்.

இவைதவிர கல்முனை பாபுஜி கடையிலும், நிந்தாவூர் இந்துக் கோவிலிலும், நிந்தாவூர் கடற்கரையிலும், வளத்தாப்பிட்டியிலும் பல் வேறுபட்ட தடவைகளில்அறு நூறுக்கும் மேற்பட்டோர் சுட்டுக் கொல்லப்பட்டு எரிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி, ஆஸ்பத்திரி வீதியில் உள்ள நூற்றுக்கணக்கான கடைகள், பிரதான வீதியிலுள்ள நூற்றுக்கணக்கான கடைகளும், வீடுகளும் முதலாம், இரண்டாம் மூன்றாம் குறுக்குத் தெருவிலுள்ள வீடுகள், குருநகர் கொட்டடி, பொம்மைவெளி போன்ற இடங்களில் உள்ள நூற்றுக்கணக்கான வீடுகள், கஸ்தூரியார் வீதியிலுள்ள நூற்றுக்கணக்கான கடைகள் போன்றவையும் பலாலி, மயிலிட்டி, வயாவிளான், காங்கேசன் துறை போன்ற இடங்களில் உள்ள வீடுகளும், கடைகளும் தரை மட்டமாக்கப்பட்டுள்ளன.

மூதூர் கட்டைப் பறிச்சானில் நூற்றுக்கணக்கான வீடுகளும் திருமலை நகரில் தமிழர்களுக்கு உரித்தானபல வீடுகளும், கடைகளும் முற்றாக எரிக்கப்பட்டுள்ளன.

இந்த அரசாங்கத்தின் மேல் குற்றம் சுமத்த வேண்டும் என்பதற்காக நாம் மிகைப் படுத்தி இவற்றைக் கூறவில்லை. எங்களுக்குக் கிடைத்த, சொன்ன தகவல்களின் அடிப்படையிலேயே மேற்கண்ட விடயங்களை சுட்டிக் காட்டியுள்ளோம்.

### புலிகளையே பலப்படுத்தும்

புலிகளுக்கு எதிராக யுத்தம் புரிகிறோம் என்ற பெயரில் அப்பாவி மக்கள் கொலை செய்யப்படுவதையும், அநியாயமான அழிக்கப்படுவதையும் நாம் வெறுமனேபார்த்துக் கொண்டிருக்க முடியாது.

நாம் ஜனாதிபதிக்கும், இந்தச் சபைக்கும் மீண்டும் கூறுவது என்ன வென்றால் உங்களது இந்த நடவடிக்கைகள் தமிழ் மக்களை மேலும் மேலும் புலிகள் பக்கமே திருப்புமல்லாமல் நிச்சயமாக அரசாங்கத்துக்கு தமிழ் மக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# ஒற்றையாட்சி முறையின்....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பட்டு இனப் படுகொலை ஒன்றை கட்டவிழ்த்திருக்கும் நிலையில் ஜனநாயகத்தின் குரலாக நாம் விடுக்கும் நியாயங்கள் அர்த்தமற்றதாகி விடுகின்றன. இதனைக் கையாலாகாதவர்களாக, கை கட்டிப் பார்த்திருக்கவியலாது என்பதால் எமது நாடாளுமன்ற ஆசனங்களைத் திறக்க முடிவு செய்துள்ளோம்.

கடந்த ஆண்டில் நாம் இந்த நாடாளுமன்றத்தினுள் அடியெடுத்து வைத்தபோதும் எமக்கு முழுமையான நம்பிக்கை ஏற்பட்டிருக்கவில்லை. என்பதை அன்றே தெளிவு படுத்தியிருந்தோம்.

ஆனால் தமிழ் பேசும் மக்களின் அடிப்படை அரசியல் அபிலாசைகளைப் புரிந்து கொண்டு நிவர்த்திக்கவும், தமிழ் பேசும் மக்கள் மீது இராணுவ அடக்குமுறை ஏவி விடப்படமாட்டாது என்றும் ஜனாதிபதி பிரேமதாஸா தந்த உறுதி மொழிகளின் அடிப்படையில் நாடாளுமன்ற நடவடிக்கைகளில் பங்கேற்றோம்.

எனினும் கடந்த ஜூன் 11 ஆம் திகதி முதல் நடக்கும் சம்பவங்களின் தொடர்ச்சியாக மீண்டும் இராணுவ அடக்கு முறை ஏவி விடப்பட்டிருப்பதை எவ்வகையிலும் பொறுத்துக்கொள்ள இயலாது.

### தேசிய பாதுகாப்பு முலாம்

இராணுவ ரீதியாக தமிழ் பேசும் மக்களின் எண்ணங்களைத் தோற்கடிக்க முயலும் அதே சமயம், 'தேசிய பாதுகாப்பு' என்னும் முலாம் பூசியபடி பௌத்த - சிங்கள பேரினவாதம் தூண்டப்பட்டு வளர்க்கப்படுகின்றது- ஐக்கிய இலங்கை- இனங்களுக்கிடையிலான ஐக்கியம் என்பவைகள் வெறுமனே நுனி நாக்குப் பேச்சுக்களாக வலுவிழந்து போகின்றன. நாளாந்தம் படை வீரர்களின் மனோ பலத்தைப் பேணும் முயற்சியாக மேற்கொள்ளப்படும், செயற்பாடுகள் முழுத் தமிழ் பேசும் மக்களையும் அச்சுறுத்துவதாக அமைகின்றது.

இந்த நிலையில் அரசியல் அமைப்பு ரீதியான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, ஜனநாயக வழி முறைகளினூடாக தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகள் புரிந்து கொள்ளப்படும் -நியாயமான நிரந்தரத் தீர்வுகள் எட்டப்படும் என்ற கற்பனையில் காலம் கழிப்பது சற்றும் பொருத்தமுடையதாக எமக்குத் தோன்றவில்லை. கடந்த காலங்களில் சிறிலங்காவின் அரசுத் தலைவர்கள், வீழ்த்தப்பட்ட பேரினவாதச் சகதிக்குள்ளேயே ஜனாதிபதி பிரேமதாசாவும், அவரது அமைச்சர்களும் வீழ்த்தப்பட்டு விட்டனர் என்றே நாம் முடிவு செய்ய வேண்டியவர்களாயுள்ளோம்.

### கை நழுவ விட்டது

மேலும் தமிழீழ விடுதலைப் புலிகளும், மாகாண சபைத் தீர்வு என்பது தமிழ் பேசும் மக்களைத் திருப்திப்படுத்தப் போதுமானதல்ல என்பதைத் திட்ட வட்டமாகத் தெளிவு படுத்திவிட்டனர். எனவே ஒற்றையாட்சி முறையை வலியுறுத்தும் இன்றைய அரசியல் அமைப்புத் திட்டத்திற்கு உட்பட்டுத் தமிழ்பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்குத் தீர்வு காணும் வாய்ப்பு கை நழுவிப் போய் விட்டது என்றே சொல்ல வேண்டும்.

இதற்குப் பின்னாலும் இந்திய அரசும், அதன் இராணுவமும் செய்ததைப் போல மாற்றுச் சக்திகளைப் பயன்படுத்தி மாகாண சபைகளை தமிழ் பேசும் மக்கள் மீது வலுக்கட்டாயமாகத் திணித்துவிடும் முயற்சியே மாகாண சபைத் தேர்தலுக்கான அறிவிப்பு என நாம் நம்புகின்றோம். ஆனால் ஒரு புறத்தில் இன ஒழிப்பையும், இராணுவ முஸ்தீபுகளையும் நடத்திக் கொண்டே மறுபுறத்தில் ஐக்கிய இலங்கை என்பதைக் காப்பாற்ற முனைவது அர்த்தமற்றது மட்டுமல்ல, காரிய சாத்தியமற்றதும் ஆகும் என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

விமானத் தாக்குதல்கள் -நீண்டதூர ஏவுகணைத் தாக்குதல்கள் - பீரங்கித் தாக்குதல்கள் - மறைமுகமாகவும் நேரடியாகவும் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தடைகள் எ்பன இரண்டு பகை நாடுகள் ஒன்றுடன் ஒன்று மோதுகின்ற காட்சியையே எமக்கு நினைவூட்டுகின்றன.

மேற்படி இராணுவ நடவடிக்கைகள் நாம் சிறிலங்காவின் குடிமக்களல்ல என்ற முடிவை மேற்கொள்ளவே எமது மக்களை நிர்ப்பந்திக்கின்றன. அப்பாவி மக்களின் அடிப்படை நலன்களை நசுக்கும் மேற்படி நிலைமைகளை நீக்கும் பொருட்டு நாம் தெரிவித்த ஆலோசனைகளும் — விடுத்த கோரிக்கைகளும், புறக்குடத்து நீராக வீணே கழிந்துபோன நிலையில் நாம் பதவிகளைத் துறந்து, எமது மக்களின் துன்பத்திலும்,வேதனையிலும் பங்கெடுத்துக் கொள்வதே சிறந்தது எனக் கருதுகின்றோம் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்று விடுவிப்பு

யாழ்ப்பாணம். ஜூலை 23

விடுதலைப் புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரில் மற்றொரு பகுதியினர் இன்று மாலை 4 மணியளவில் பண்டத்தரிப்பிலுள்ள விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் பிரதேச பணிமனையில் வைத்து விடுதலை செய்யப்பட உள்ளனர்.

விடுவிக்கப்படுவோரை வந்து பொறுப்பேற்குமாறு அவர்களின் பெற்றோர்களிடம் விடுதலைப் புலிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (உ-9)

# வி. பி. சிங் இன்று சோவியத் புறப்பாடு

புதுடில்லி ஜூலை 23

நான்கு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இந்தியப் பிரதமர் விஸ்வநாத் பிரதாப் சிங் இன்று திங்கட்கிழமை சோவியத்யூனியனுக்குச் செல்கிறார்.

தேசிய முன்னணி அரசு பதவிக்கு வந்த பின்னர்திரு. சிங்சோவியத்யூனியனுக்குசெல்வது இதுவே முதல் தடவை ஆகும்.

இருதரப்பு உறவுகள், காஷ்மீர் பிரச்சினை, இந்துசமுத்திரப் பாதுகாப்பு ஆகியன குறித்து திரு. சிங், சோவியத் ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவுடன் பேச்சுக்கள் நடத்துவார் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

# ஜெனரேட்டர் மூலம் மின்சாரம்

பச்சிலைப்பள்ளி, ஜூலை 23

சாவகச்சேரி மாவட்டவைத்திய சாலைக்கு ஜெனரேட்டர் மூலம் மின்சாரம் வழங்கப்படுகிறது.

அண்மையில் யாழ்.பிராந்திய சுகாதார பணிப்பாளரினால் வழங்கப்பட்ட இந்த ஜெனரேட்டர் திருத்தப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. (இ-117)

# கிளிநொச்சி ஆசிரியர் முற்பணம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து இடம் பெயர்ந்த ஆசிரியர்களுக்கு சம்பளமுற்பணமாக ரூபா ஆயிரம் வழங்குவது பற்றி முடிவு செய்யப் படவில்லை.

இப்படி கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

அந்த மாவட்டத்தில் பாடசாலைகள் நடைபெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளதாலேயே, அதற்கு தடையாக இருக்காது முற்பணம் வழங்குவது பற்றி முடிவு செய்யப் படவில்லை என்றார் அவர். (இ-3)

# வெளிநாட்டுச் சக்திகள் தலையிட்டு சண்டையை மேலும் தூண்டிவிட அனுமதிக்கக் கூடாது

*அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதம் கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் இடம் பெற்றது.*

*அப்போது இடம்பெற்ற பேச்சுக்களின் தொகுப்பு இங்கு பிரசுரமாகிறது*

### லக்ஷ்மன் ஜெயக்கொடி

சுதந்திரக்கட்சி எம் பி லக்ஷ்மன் ஜெயக்கொடி பேசியதாவது:-

வெளிச் சக்திகள் தலையிட்டு தற்போதைய சண்டையை மேலும் தூண்டிவிட அனுமதிக்கக்கூடாது.

இந்தியாவின் எண்ணம் அனைவருக்கும் தெரிந்ததே. அப்படித் தெரிந்துகொண்டும் சர்வதேச சமூகத்தின் பங்களிப்பை அரசு கோரியுள்ளது.

மூன்றாவது தரப்பாக வர பிரிட்டன் முன்வந்ததை நாம் அறிவோம்.

எப்படியாயினும் இப்போது பிரிட்டிஷ் தூதர் டேவிட் கிளாட்ஸ்டன் பின் வாங்கி விட்டார்.

பிரிட்டன் என்ன பங்கை இது விஷயத்தில் வகிக்கப் போகிறது?

அரசு அறிக்கை ஒன்றை வெளியிட வேண்டும்.

விமானத் தாக்குதல்கள் குறித்தும் அரசாங்கம் திட்டவட்டமான அறிக்கை ஒன்றை வெளியிட வேண்டும்.

யாழ்ப்பாணம் குடாநாட்டை இலங்கை ஆயுதப் படையினர் கைப்பற்ற இந்தியா ஒருபோதும் அனுமதிக்காது என்பது நாம் அனைவரும் அறிந்த ஒரு விஷயம்.

'வடமராட்சி நடவடிக்கையின் போது நடந்ததையும் நாம் அறிவோம்.

அப்படி நாம் யாழ் குடாநாட்டை கைப்பற்ற முயன்றால் தமிழகத்துக்கு அதிக அளவில் அகதிகள் செல்வார்கள். இதனை இந்தியா அனுமதிக்காது.

விமானத் தாக்குதல்கள் குறித்து அவர்கள் முறையிட்டுக் கொண்டே இருப்பார்கள்

கிழக்கில் சகஜ நிலைமை திரும்பி விட்டது என்று அரசு கூறுகிறது.

### சகஜ நிலையின் அர்த்தம் என்ன?

சகஜ நிலை என்பதன் அர்த்தம்என்ன? பொது ஸ்தாபனங்கள் அங்குஇயங்குகின்றனவா?

மாகாண சபைகளுக்கு நிதி ஆணைக்குழு எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்தது என்பதை அரசு வெளியிடவேண்டும்.

அந்த நிதியில் இருந்து ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளனவா? என்பதையும் அரசு தெரியப்படுத்த வேண்டும்.

இப்போது அமைச்சர் ஹமீது ஈரோஸ் இயக்கத்துடனா பேச்சுக்களை நடத்தி வருகிறார்?

சபாநாயகர் தலைமையில் நாடாளுமன்றக் குழு ஒன்றை அரசு இந்தியாவுக்கு [illegible] வைத்ததை வரவேற்கின்றோம்.

தமிழ்க் கட்சிகள் எதுவும் அக்குழுவில் அங்கம் வகிக்காதது வருத்தத்துக்குரியது.

அதிகாரப் பரவலாக்கல் குறித்து ஐக்கிய தேசியக் கட்சியும், சுதந்திரக் கட்சியும் உடன்பாடு ஒன்றுக்கு கட்டாயம் வரவேண்டும்.

இப்படி லக்ஷ்மன் ஜெயக்கொடி தெரிவித்தார்.

### பிரின்ஸ் காசிநாதர்

திரு பிரின்ஸ் காசிநாதர் (தமிழர் விடுதலைக் கூட்டணி மட்டக்களப்பு மாவட்டம்) பேசுகையில் சொன்னதாவது;-

மட்டக்களப்பில் மக்களுடன் இராணுவம் நல்லுறவை முன்னர் வைத்திருந்தது.

இப்போது அந்த நிலை இல்லை.

மட்டக்களப்பில் உள்ள ஒவ்வொருவரும் விடுதலைப் புலி என்றே கணிக்கப்படுகின்றனர்.

கைது செய்யப்பட்டவர்கள் பற்றி தகவல் ஏதும் இல்லை.

அவர்களின் தலை விதி பற்றி எம்மிடம் சொல்லுங்கள்.

இது போன்ற நடவடிக்கைகள் நிறுத்தப்படவேண்டும்.

நிலைமையை அவதானிக்க மட்டக்களப்புக்கு விஜயம் செய்ய அனுமதியுங்கள்.

இந்த யுத்தத்தில் அரசு வெற்றி பெற வேண்டும் [illegible] லெண்ணத்தினால் தான் நிறைவேறலாம்; ஆயுதங்களால் அல்ல.

இப்படி திரு. பிரின்ஸ் காசிநாதர் சொன்னார்.

### திவ்யநாதன்

திரு ஜே திவ்யநாதன் (தமிழர் விடுதலைக் கூட்டணி எம் பி ) சொன்னதாவது;-

இது தமிழருக்கு எதிரான யுத்தம் அலல என்ற அம்சத்தை ஏற்றுக்கொள்கிறோம்.

எப்படியாயினும் தற்போதைய நிலவரம் ஒவ்வொரு கட்டத்தில் தமிழ்ச் சமூகம் அழிக்கப்படுவதைத்தான் காட்டுகின்றது.

மக்கள் எரித்துக் கொல்லப் படுகின்றார்கள். தமிழரும், முஸ்லிம்களும் இப்படிக் கொல்லப்படுகிறார்கள்.

கொல்லப்பட்டவர்களின் எலும்புக் கூடுகள் கல்முனையில காணப்பட்டன.

மூதூரில் நூற்றுக்கணக்கான குடிமக்கள் கொல்லப் பட்டனர்.

எந்த அரசியல் கட்சி மீதும் நான் குற்றம் சாட்டவில்லை. கிழக்கில் இன்று தமிழரையும், முஸ்லிம்களையும் பிரிப்பதற்கு ஒரு கொலைக்காரக் கூட்டம் இயங்குகிறது.

பல கொலைகளுக்கு இக் கூட்டமே பொறுப்பாக உள்ளது.

இக்கொலைகாரக் கூட்டங்கள் இயங்க அரசு அனுமதிக்கக் கூடாது. (இ-எ)

# வடபகுதிக்கு....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

செல்லும் ஊழியர்கள் உயிருக்குப் பாதுகாப்பு வழங்கப்படும் விதத்தில் இராணுவத்தின் அனுமதி தேவை. அந்த அனுமதியை பாதுகாப்பு அமைச்சிடம் பெற வேண்டும். அது சம்பந்தமான முயற்சிகளை மின்சார சபையின் கொழும்பில் உள்ள தலைமை அலுவலகமே மேற்கொள்ள வேண்டும். ஆனால் இதுவரை அதற்கான முயற்சிகள் எதுவும் எடுக்கப் படவில்லை. (அ உ110)

# ஈரோஸ்---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கொடுத்ததாகவும் —

ஆனால் அவர்களை அந்தப் பட்டியலில் சேர்க்கவேண்டாம் என அதிகாரிகள் அறிவுறுத்தல் விடுத்ததை அடுத்து, அவர்களை விட்டுவிட்டு அணி புறப்பட்டதாகவும் கூறப்பட்டது.

செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக் குழுவினர் அத்தியாவசிய பொருள்களை ஏற்றி வந்தபோது அந்த அணியுடனும்சேர்ந்து வர ஈரோஸ் பிரமுகர்கள் முயன்றனராம்.

அதற்கும் அனுமதி அளிக்கப் படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

# தென்னை மரம் விழுந்து மரணம்

பச்சிலைப்பள்ளி, ஜூலை 23

பதுங்குகுழி அமைப்பதற்கு தென்னை மரம் தறித்த வர்த்தகர் ஒருவர் அந்த தென்னைமரம் விழுந்து மரணமானார். அல்லிப்பளையில் இச்சம்பவம் இடம்பெற்றது.

# 2 லட்சம் முஸ்லிம் அகதிகள்

கொழும்பு, ஜூலை 22

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் சண்டையில் அகதிகளாக உள்ளவர்களில் இரண்டு லட்சத்துக்கும் அதிகமானோர் முஸ்லிம்கள் என்று துணை அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர் தெரிவித்தார்.

புத்தளத்தில் தங்கி உள்ள முஸ்லிம் அகதிகளை பார்வையிடச் சென்றிருந்த சமயத்தில் அவர் இத்தகவலை வெளியிட்டார். [உ-எ]

# அத்தியாவசிய...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பட்டு லொறிகள்மூலம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்படும்

செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவே இந்தக் கப்பலை ஒழுங்கு செய்துள்ளது. (இ-3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





# உதயன்

23 - 7 - 1990 திங்கட்கிழமை






வவுனியாவில்

## இராணுவக் கேடயமாக 1,500 தமிழ் குடும்பங்கள்!

யாழ்ப்பாணம், ஜூலை 23 வவுனியா நகரில் 1, 500 தமிழ்க்குடும்பங்கள் இராணுவத்தினரால் கேடயமாக வைக்கப்பட்டுள்ளன.

வவுனியாவின் நகர, புறநகரப் பகுதிகளில் ரம்பைக்குளம், கோவில்குளம் ஆசிக்குளம். பெரியகோமரசன் குளம், முருகன் ஊர், சமணங்குளம், சிதம்பரபுரம், கோவில் புளியங்குளம், கல்நாட்டியகுளம், ஆகிய கிராமங்களில் உள்ள தமிழ் குடும்பங்களே கேடயமாக வைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

ஒரு பக்கம் இராணுவ முகாகள், மறுபுறம் ஆயுதம் வழங்கப்பட்ட சிங்களக்கிராமவாசிகள் இந்தத் தமிழ்க் குடும்பங்களைச் சூழவுள்ளனர். (இ-3)

## இன்று தபால் விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூலை 23 கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்ட உள்நாட்டு தபால்கள் இன்று விநியோகிக்கப்படும். (ஒ-10)

# ஈழத்திலேயே தமிழர்களுக்கு ஐ. நா. உதவியுடன் அகதிமுகாம்

## இலங்கையை வற்புறுத்த கருணாநிதி கோரிக்கை

சென்னை, ஜூலை 23 ஈழத் தமிழருக்கு இலங்கை வடபகுதியிலேயே அகதி முகாம்கள் அமைக்கப்படுவது தொடர்பாக தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி, பிரதமர் வி. பி. சிங்குக்கு கடிதம் ஒன்றை எழுதியிருக்கிறார்.

இலங்கையில் இருந்து மேலும் தமிழ் அகதிகள் தமிழகம் வருவதைத் தடுக்க வட இலகையில் அகதிமுகாம்களை அமைக்க இலங்கை அரசை உடனடியாகச் சம்மதிக்கவைக்கும்படி அக் கடிதத்தில் திரு. கருணாநிதி, பிரதமர் சிங்கைக் கேட்டிருக்கிறார்.

''இந்த முகாம்கள் அகதிகளுக்கான ஐ நா. தூதராலயத்தின் உதவியுடன் அமைக்கப்படவேண்டும்.''- என்றும் அக்கடிதத்தில் திரு. கருணாநிதி வலியுறுத்தியிருக்கிறார்.

''ஏற்கனவே 29 ஆயிரத்துக்கு அதிகமான இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழகம் வந்துவிட்டனர். தினமும் ஆயிரம் பேர் வரை அகதிகள் வந்துகொண்டிருக்கின்றனர். இந்த நிலைமைநீடிக்குமானால் இன்னும் ஒரு மாதத்தில்இந்த எண்ணிக்கை ஒரு லட்சமாக அதிகரித்துவிடும். இது தமிழகத்தில் சமூகப் பிரச்சினைகளையும், பதற்றத்தையும் தோற்றுவிக்கும்.'' - என்றும் திரு.கருணாநிதி கூறியிருக்கிறார். (உ-6)

## டில்லி சென்ற எம். பிக்கள் குழு சனி இரவு நாடு திரும்பியது

கொழும்பு. ஜூலை 23 புதுடில்லி சென்றிருந்த இலங்கை நாடாளுமன்றத் தூதுக்குழு சனிக்கிழமை இரவு கொழும்பு திரும்பியது.

சென்ற 17 ஆம் திகதி புதுடில்லி சென்ற இத் தூதுக் குழுவுக்குத் தலைவராக சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முஹமது இருந்தார்.

அங்கு இந்திய அரசியல் கட்சிகளின் தலைவர்கள், நாடாளுமன்றஉறுப்பினர்கள் வெளியுறவு அமைச்சர், பிரதமர், உபஜனாதிபதி ஆகியோரைத் தூதுக்குழுவினர் சந்தித்தனர்.

இந்திய விஜயம் பற்றிய பெறுபேறுகளை சபாநாயகர் நேற்று இரவு ஜனாதிபதியைச் சந்தித்து எடுத்துக் கூற இருந்தார். (ஒ-எ)

## ஆசிரியரின் ஜூன் சம்பளம் அடுத்த சில தினங்களில்

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு ஜூன் மாதச் சம்பளமும், ஒன்றரை மாத கஷ்ட நிவாரணப் பணமும் புதன் கிழமைக்கு முன்பாக வழங்கப்பட உள்ளது.

பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் இதனைத் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில்உள்ள ஆசிரியர்களுக்கு ஜூன் மாதச் சம்பளம் வழங்குவதில் இருந்து வந்த தடையை நீக்கும் வகையில் பணிப்பாளர் வெள்ளி, சனி, இருநாட்களும் கொழும்பு கல்வியமைச்சு ராஜங்க அமைச்சு அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டார்.

இதனை அடுத்து 3 கோடியே 50 லட்சம் ரூபா கொழும்பு இலங்கை வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இன்று காலை இலங்கை வங்கி அதிகாரிகள் கொழும்புடன் தொடர்பு கொண்டு பணிப்புரையைப் பெற்றால், உடனடியாக சம்பள வேலைகள் மேற்கொள்ளப்பட்டு புதன் கிழமைக்கு முன்பாக சம்பளமும் ஒன்றரை மாதச் சம்பள கஷ்ட நிவாரணப் பணமும், காசோலையாக வழங்கப்படும் என்று பணிப்பாளர் தெரிவித்தார்.

## தபால் சேவை கப்பல் மூலம்

யாழ்ப்பாணம், ஜூலை 23 யாழ். மாவட்டத்துக்கான தபால் சேவை கப்பல் மூலமே மேற்கொள்ளப்பட இருக்கிறது.

கொழும்பில் சடந்த மாதம் 13ஆம் திகதியில் இருந்து தேங்கிக் கிடந்த வெளிநாட்டுக் கடிதங்களும், டிராப்டுகளும் நாளை மறுதினம் வரும் கப்பலில் கொண்டு வரப்படும்.

இங்கிருந்து தபால் பொதிகள் வெள்ளிக்கிழமை அதே கப்பலில் கொழும்புக்கு அனுப்பப்பட உள்ளன.

கொழும்பில் தேங்கிக் கிடந்த உள்நாட்டுக் கடிதங்கள் சடந்த சனிக்கிழமை வாகன அணி மூலம் யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டது தெரிந்ததே. (இ-3)

## போர் நிறுத்தம் கோரி பாரதிய ஜனதா தீர்மானம்

சென்னை, ஜூலை 23 இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் உடனடியாக போர் நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும்.

இலங்கைப் பிரச்சினை பற்றி பாரதிய ஜனதா கட்சியின் தேசிய நிர்வாக சபையின் இரண்டாம் நாள் கூட்டத்தில் நேற்று மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டது.

எடுக்கப்பட்ட மற்றும் தீர்மானங்கள் வருமாறு:-

★ இலங்கையின் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் காத்திட அனைத்துத் தரப்பினரும் கலந்து கொள்ளும் வட்டமேசை மாநாட்டை நடத்த இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

★ இலங்கை நிலைவரத்தை நேரில் கண்டறிய இந்திய நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து அரசியல் கட்சிகள் அடங்கிய நாடாளுமன்றக் குழு ஒன்றை இலங்கைக்கு அனுப்ப புதுடில்லி அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

★ குடியிருப்புப் பகுதிகளில் இலங்கை அரசுப் படையினர் நடத்தி வரும் விமானத்தாக்குதலை கட்சி கண்டிக்கின்றது.

★ வடக்கு—கிழக்கு தமிழ் மக்களுக்கு முறையான அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டும் என்றும் கட்சி வலியுறுத்துகின்றது.

இப்படி தீர்மானத்தில் கூறப்பட்டு உள்ளது. (இ-எ)

சேதமடைந்த

## ஆனையிறவு தாம்போதியை திருத்த முன்னுரிமையாம்!

கொழும்பு, ஜூலை 23 சேதமடைந்த ஆனையிறவு தாம்போதியை அதிமுன்னுரிமை கொடுத்துத் திருத்தும்படி ஆயுதப் படையினருக்கு தாம் உத்தரவிட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க நேற்று கொழும்பில் தெரிவித்தார்.

வடபகுதிக்குத் தேவையான உனவுப்பொருள்கள் மற்றும் மருந்து வகைகளை அனுப்புவது, இத்தாம்போதியைத் திருத்தாவிட்டால் தடைப்படும் என்பதாலே தான் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் ஜெனரல் ரணதுங்க தெரிவித்தார். (ஒ-எ)

## வல்வையில் பலாலிஷெல்

வல்வெட்டித்துறை, ஜூலை23 வல்வெட்டித்துறையில் கடந்த புதன்கிழமை கரும்புலிகள் மேஜர் காந்தரூபன், கப்டன் விநோத், கப்டன் கொலின்ஸ்ஆகியோரது நினைவஞ்சலிக் கூட்டம் நடைபெற்றவேளையில் அப்பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

பலாலியில் இருந்து ஏவப்பட்டதாகக்கருதப்படும் இந்த ஷெல்கள் திருவில், சிவபுரவீதி ஆகிய இடங்களில் விழுந்து வெடித்தன.

இதனால் இப்பகுதியிலுள்ள சில வீடுகள் சேதமுற்றன. மரங்கள் சிதைவுற்றன.

## தனியார் பஸ் உரிமையாளர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 23 யாழ். மாவட்டத்திலுள்ள தனியார் தூர பஸ் சேவை உரிமையாளர்களுக்கான கூட்டம் ஒன்று இன்று பிற்பகல் 2 மணியளவில் யாழ். மாநகரசபை மண்டபத்தில் நடைபெறும்.

பஸ் உரிமையாளர்களை இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (உ-9)

## இணைப்பதிகாரி

கொழும்பு, ஜூலை 23 அம்பாறை—மட்டக்களப்பு மாவட்டங்களின் இணைப்பதிகாரியாக பொலீஸ் அதிபர் ஜனாப் எம். ஏ. அப்துல் மஜீத் நியமிக்கப்பட்டிருக்கிறார். (உ-எ)

## தமிழ் மக்க

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி )

கள் ஆதரவு தரமாட்டார்கள். புலிகளை அழிக்கிறோம் என்ற பெயரில் புலிகளைப் பலப்படுத்தும் வேலைகளையே நீங்கள் செய்து வருகிறீர்கள்.

இன்று நடக்கும் யுத்தத்தில் நிச்சயமாக இருதரப்பினரும் வெல்லப்போவது கிடையாது. இந்த யுத்தம் வருடக்கணக்காக நீடிக்கும் ஒரு யுத்தமாகவே எமக்குத்தோன்றுகிறது. எனவே இந்த நாட்டில் அமைதியையும், ஜனநாயகத்தையும் உருவாக்குவதற்கான முயற்சியில் ஆளும் கட்சி எதிர்க்கட்சிகள் என்ற வேறுபாடின்றி சகலரும் இணைந்து செயற்பட வேண்டும்.

இப்படி அவர் கேட்டுக் கொண்டார். (இ-5)

## ஜீ.சி.ஈ சாதாரண தர பரீட்சை முடிவுகள் இன்று

கொழும்பு, ஜூலை 23 ஜீ. சி. ஈ. சாதாரண தர பரீட்சையின் பெறுபேறுகள் இன்று திங்கள் வெளியாகின்றன.

வடக்கு - கிழக்கு மாகாண பரீட்சார்த்திகளுக்கான பெறுபேறுகள் விசேட கல்விப் பணிப்பாளர்களிடம் கையளிக்கப்படும் என்று இலங்கை வானொலி அறிவித்தது. (உ-எ)

## முல்லைத்தீவில் அகதிகள் நிலை அறிய பிரெஞ்சு அதிகாரி

யாழ்ப்பாணம், ஜூலை 23 முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள அகதிகளுக்குவேண்டிய வைத்திய வசதிகள் குறித்து ஆராய்வதற்காக பிரெஞ்சு நாட்டின் 'எம். எஸ். எவ். வைத்திய உதவி அமைப்பு அதிகாரி ஒருவர் அங்கு சென்றுள்ளார்.

திருகோணமலையில் இருந்து அகதிகளாக வந்து வைத்தியவசதி இன்றி மக்கள் முல்லைத்தீவில் அல்லற்படுவதாக வெளிவந்த செய்திகளை அடுத்தே கொழும்பில் இயங்கும் எம். எஸ். எவ். அமைப்பு தனது அதிகாரிகளில்ஒருவரை முல்லைத்தீவுக்கு அனுப்பியுள்ளது.

அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறும், வைத்திய உதவியின் முக்கியத்துவம் பற்றி ஆராயும்படியும் அந்த அதிகாரிக்குப் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (அ-3)

## செல்லக்கிளி நினைவாக....

யாழ்ப்பாணம், ஜூலை 23 விடுதலைப் புலிகளின் கெரில்லா தாக்குதல் பிரிவின் தலைவராகவிருந்த லெப்ரினன்ட் செல்லக்கிளியின்(சதாசிவம் செல்வநாயகம்—திருநெல்வேலி கிழக்கு) ஏழாவது ஆண்டு நினைவு தினம் இன்றாகும்.

இதனை ஒட்டி செல்லக்கிளியின் நினைவாக இன்று மாலை யாழ் கல்வியங்காட்டுச் சந்தியில் நினைவுத் தூபி ஒன்று திறந்து வைக்கப்படுகின்றது.

1983 ஆம் ஆண்டு ஜூலை 23 ஆம் திகதி திருநெல்வேலிப் பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய முதலாவது பெரும் தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவத்தில் லெப்டினன்ட் செல்லக்கிளி வீரமரணமடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

விடுதலைப் புலிகளிடம்

## விமான எதிர்ப்பு ஆயுதங்களா? அதற்கும் எம்மிடம் பதிலுண்டு

### இப்படி சொல்கிறார் ரஞ்சன்

கொழும்பு, ஜூலை 22 விடுதலைப்புலிகள் விமான எதிர்ப்பு ஆயுதங்களை வாங்குவதானால் வாங்கிக்கொண்டு வரட்டும். அதற்கும்எம்மிடம் சொந்தமாகப் பதில் உண்டு நாமும் ஆயுதங்களை வாங்கிக் கொண்டுதான் இருக்கிறோம்.

இவ்வாறு தெரிவிக்கிறார் பாதுகாப்புத் துணை அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்தினா.

பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் வைத்து செய்தியாளர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இப்படிச் சொன்னார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது;-

விடுதலைப் புலிகளிடம் நிறைய ஆயுதங்களும் வெடிமருந்துகளும் இருக்க வேண்டும்.

தமிழ் தேசிய இராணுவத்தினரிடமிருந்து ஏராளமான ஆயுதங்களை விடுதலைப்புலிகள் கைப்பற்றினார்கள்.

அந்த ஆயுதங்களைப் பறிக்க விடுதலைப் புலிகளுடன் நான் சண்டையிட நேரிடலாம் என்று இந்திய இராணுவ அதிகாரி ஒருவரை முன்னர் எச்சரித்திருந்தேன்.

தமிழ் தேசிய இராணுவத்திடமிருந்து ஒரு கோடிரூபா பெறுமதியான ஏ. கே. 47ரக துப்பாக்கிகளையும் மோட்டார்களையும்நாம் கைப்பற்றினோம்.

கேள்வி:- அந்த ஆயுதங்களை என்ன செய்தீர்கள்?

ரஞ்சன்:- அவற்றை ஆயுதக் கிடங்குக்கு அனுப்பிவிட்டோம்.

**விமான எதிர்ப்புத்துப்பாக்கி**

கேள்வி:- விமான எதிர்ப்புத் துப்பாக்கிகளை வாங்குவதில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டுள்ளனர் என்று சொல்லப்படுகிறதே?

ரஞ்சன்:-அவர்கள் வாங்கிக் கொண்டுவரட்டும். அதற்கு எம்மிடம்சொந்தமாகப் பதில் உண்டு. நாமும் வாங்கிக் கொண்டுதான் இருக்கிறோம்.

மாங்குளம் முகாமைச்சுற்றி மூன்று மைல் பிரதேசம் ஆயுதப் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளது. இதற்கான சண்டையில் ஆயுதப் படையினரில் 7 பேர் உயிரிழந்தனர் — என்றார்.(ஒ-உ)

## இருள்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வாழும் மக்களும் பீதியடைந்தனர்.

சேத விவரங்களை நேற்றிரவு உடனடியாக அறியமுடியவில்லை. (அ)

# மரண அறிவித்தல்கள்

## சறோஜினி ஜெயராஜா

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சறோஜினி ஜெயராஜா 21 - 07 - 90 அன்று இறைவனடி சேர்ந்தார். இவர் காலஞ்சென்ற திரு. திருமதி வேதிங்டன் ஆகியோரின் கனிஷ்ட புத்திரியும், ஜெயராஜா (நில அளவையாளர்) வின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு. திருமதி ஞானரெத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகளும். பீற்றர், யேசுராஜா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார். நல்லடக்க ஆராதனை பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:

ஜெயராஜா (கணவன்)

Main Road,
Vaddukoddai.

[13683]

## செல்லத்துரை சத்தியசீலன்

செல்லத்துரை சத்தியசீலன் காலமானார். இளைப்பாறிய இறைவரி உத்தியோகத்தரும், M. N. S. Krester and Co வில் கடமை புரிபவரும், மானிப்பாயை பிறப்பிடமாகவும் ஆலங்குளாய் சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சத்தியசீலன் 20 - 07 - 90 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார். இவ்வறிவித்தலை உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

கேசவராஜன்

ஆலங்குளாய்,
சண்டிலிப்பாய்.

[13686]

## திரு. கந்தையா இராசையா J.P.

(ஓய்வு பெற்ற அதிபர்)

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வளலாயை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கந்தையா இராசையா (சமாதான நீதிபதி, ஓய்வு பெற்ற அதிபர்) 21 - 07 - 90 சனிக்கிழமை அகால மரணமடைந்து விட்டார். இவர் அம்மிணிப்பிள்ளையின் அன்புக் கணவரும், திருவாார்கோனின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 22 - 07 - 90 ஞாயிற்றுக் கிழமை நல்லடக்கம் செய்யப்பட்டதென்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

இங்ஙனம்

மனைவி, மகன்,

வளலாய்,
அச்சுவேலி.

[13687[

## கந்தையா தங்கரத்தினம்

கைதடி நாவற்குழியைச் சேர்ந்த கந்தையா தங்கரத்தினம் 22-07-90இல் காலமானார். இவர் மாணிக்கவாசகர் கந்தையா அவர்களின் மனைவியும், காலம் சென்ற மணிவாசகன் (பொறியிலாளர்), மனோகரன், மகேந்திரன் அவர்களின் அன்புத்தாயாரும், விமலா, காலம் சென்ற ஞானாம்பிகை, பத்மநாயகி, குகராணி ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை காலை 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இருந்து ஈமக்கிரியைகளுக்காக தனிப்பனை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

தகவல் கொடுப்பவர்:

க. மனோகரன் (மகன்)

கைதடி நாவற்குழி,
கைதடி.

[13688]


## தேவை

மிருகவில், எழுதுமட்டுவாள், இயக்கச்சி, தாளையடி, பூநகரி ஆகிய இடங்களில் எமது வெளியீடுகளாகிய உதயன், சஞ்சீவி, அருச்சுனா, ஞானக்கதிர், ஜோதிடஜோதி ஆகியவைகளை விற்பனை செய்வதற்கு விற்பனைமுகவர்கள் தேவை.

பிணைப்பணம் செலுத்தக் கூடியவர்கள் நேரிலோ அல்லது கடிதமூலமோ கீழ்க்கண்ட விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும்.

உதயன் பணிமனை,
292/2, நாவலர் வீதி,
கயிலாசபிள்ளையார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்(பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 லக்கத்தில் உள்ள அச்சகத்தில் 23-07-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org